IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.170/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.35

வா.சா. 1 சாட்சி பாப்பம்மாள் த.பெ.பாண்டியன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.07.2025 in accordance with the provisions of Act XX141.**

1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா வழக்கின் வாதி எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயார் எங்கு உள்ளார் என்றால் ைஹதராபத்தில் உள்ளார். அவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் 85 ஆகிறது. எனது தாயாருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள் ஆவார்கள். என்னையும் சேர்த்து. 4 பெண் பிள்ளைகள் ஆகும். என்னைத்தவிர மற்ற பெண் பிள்ளைகளுக்கு இந்த வழக்கு விபரம் தெரியும் என்றால் தெரியும். எனது தாயார் வழக்கை நடத்துவதற்கு எழுத்து மூலமாக அதிகாரம் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எனது சகோதரிகள் 3 பேரும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எழுத்து மூலம் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் தாக்கல் செய்த விபரம் எனக்கு வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே தெரியும் என்றால் சரிதான். எனது தாயாரை பெற்ற தந்தை ராமசாமி நாயுடு பூர்வீகம் எது என்றால் கரிசல்காலம்பட்டி கிராமம் ஆகும். எனது பாட்டி பெயர் என்றால் ஞானம்மாள் ஆகும். ராமசாமி நாயுடும்கும் ஞானம்மாளுக்கும் மொத்தம் 3 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். ராமசாமிநாயுடு எப்போது

இறந்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். அவரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் வழக்கிடை சொத்து தொடர்பாக வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் என் கைவசம் இல்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லப்பட்டுள்ள 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி ஞானம்மாள் எங்கு இருந்தார் என்றால் கரிசல்காலம்பட்டியில் குடியிருந்தார். வயதின் முதிர்வீன் காரணமாக காலமடைந்தார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டு இறந்தார் என்றால் சரியல்ல. எனது பாட்டியின் இறப்பு சான்றிதழ் கைவசம் உள்ளது. தாக்கல் செய்யவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 16.06.2003ம் தேதியிட்ட தான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்டு பத்திரத்தில் கண்ட சொத்தையும் தாவா வழக்கில் சேரக்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.46/18 தொடர்பான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வக்காலத்து, பிராது போன்ற பதிப்பகங்களில் சுப்பம்மாள் என்பவரின் கையெழுத்து எனது தாயார் கையெழுத்து என்றால் சரிதான். 1982 பாக பிரிவினை பத்திரத்தில் உள்ள என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் உள்ள 1வது கையெழுத்தான சுப்பம்மாள் என்ற கையெழுத்து எனது தாயாருடையது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் உள்ள சுப்பம்மாள் என்ற கையெழுத்து மட்டும் **பி.வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மொத்தம் 11 இலக்க சொத்திற்கு எனது தாயார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு கரிசல்காலம்பட்டியை தவிர

மேலநேசநேரி கிராமத்திலும் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு பூர்வீக சொத்து என்பது அவர் பெயரில் உள்ள கிரைய சொத்துக்களையும் உள்ளடக்குமா என்றால் எனக்கு தெரியாது. 16.06.2003ம் தேதியில் எனது தாயாருக்கு எனது பாட்டி எழுதிகொடுத்த சொத்தானது பாட்டிக்கு பூர்வீக சொத்து என்று நாங்கள் குறிப்பிடுகிறோம் என்றால் சரிதான். மேற்படி எனது பாட்டிக்கு பூர்வீக சொத்து என்றால் அது தந்தை வழி பாத்தியப்பட்ட சொத்தா அல்லது தாயார் வழி பாத்தியப்பட்ட சொத்தா என்று காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 16.06.2003ல் குறிப்பிடப்பட்ட தான செட்டில்மெண்டு சொத்தானது எனது பாட்டிக்கு தனித்து பாத்தியப்பட்டது அல்ல என்றும் தாத்தா ராமசாமியால் 1928ம் வருடத்தில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா 1வது இலக்க சொத்து எனது தாத்தா குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும் அது 3ம் நபருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் தவறாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2 முதல் 9 இலக்க சொத்துக்களை கிராமத்தில் புணை பெயர் கொண்டு காடுகளை அழைப்பது என்றால் சரிதான். தாவா 3வது இலக்க சொத்து சுமார் 75 செண்டு என்பது செட்டிக்காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். தாவா 4வது இலக்க சொத்து சுமார் 82 செண்டு என்பது கோணார் நாயக்கர் பூரணி காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். தாவா 5வது இலக்க சொத்து 90 செண்டு என்பது சுக்கான்காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 6வது இலக்க சொத்து 50 செண்டு என்பது மஞ்சனத்திமரக்காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 7வது இலக்க சொத்து 80 செண்டு என்பது புளியமரத்துக்காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 8வது இலக்க

சொத்து 70 செண்டு என்பது ஜல்லிக்காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 9வது இலக்க சொத்து சுமார் 27 செண்டு என்பது ரெங்கமநாயக்கர் காட்டிற்கு மேற்கு காடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 10வது இலக்க சொத்து 1 ஏக்கர் 10 செண்டு என்பது பெரியகாடு என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். 11வது இலக்க சொத்து என்பது வீடு என்றால் சரிதான். தாவா சொத்துக்களை தவிர மேலநேசநேரியில் கட்டப்புளி வயல் என்று 16 செண்டு இருந்தது என்றால் சரிதான். மேலநேசநேரியில் கோட்டடி வயல், கரம்படி வயல் என்று இருந்தது என்றால் சரிதான். கோட்டடி வயல் என்பது சுமார் 17 செண்டு ஆகும். மேற்படி 17 செண்டை எனது தாயார் மேலநேசநேரியில் உள்ள ராஜேந்திரன் மனைவிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. கோணமநாயக்கர் காடை எனது தாயார் அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனது தாயார் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்யவில்லை. பொதுவாகத்தான் அனுபவம் செய்து வந்தார். ஜல்லிக்காடு என்பதையும் எனது தாயார் அனுபவம் செய்து வருகிறார் என்றல் தனிப்பட்ட முறையில் அனுவம் செய்யவில்லை. பொதுவாகத்தான் அனுபவம் செய்து வந்தார். கட்டப்புளி வயல் என்பது 3வது நபருக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் யாரும் ஒத்தி வைக்கப்படவில்லை. கட்டப்புளி வயல் ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்டு திருப்பப்பட்டு தற்போது விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலநேசநேரி கிராம சொத்துக்கள் தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் தவறான ஆவணங்களில் எதுவும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் 30

ஆண்டுகளுக்கு முன்பாகவே பாகபிரிவினை செய்துவிட்டோம் என்று சொல்லியுள்ளார்கள் ஆனால் அது தவறு. நான் சொல்வது தவறு என்றும் ஏற்கனவே 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே தாவா சொத்துக்குள் மற்றும் இதர சொத்துக்கள் தொடர்பாக பாக பிரிவினை நடத்து முடித்துவிட்டது என்றும் அதனை உறுதிப்படுத்தும் விதமாகத்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாயார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வழக்கு தவறான வழக்கு என்றும் பகுதி பாகபிரிவினை கோரி வழக்கு செய்துள்ளதாலும், ஏற்கனவே பாகபிரிவனை நடத்து முடிந்துவிட்டது என்றாலும் எனது தாயாருக்கு தாவா வழக்கில் பாகபிரிவனை கோருவதும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.25

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.